அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண். 26/2016

தேதி. 26.01.2016

# விருதுகள் பெறும் கலைஞர்களுக்கு ச.ம.க.நிறுவனர் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ வாழ்த்துக்கள்

*இந்திய தேசத்தின் உயரிய விருதுகளான பத்மவிபூசண், பத்ம பூசன் மற்றும் பத்மஸ்ரீ விருதுகள் இந்த ஆண்டில் மொத்தம் 112 பேருக்கு வழங்கப்பட உள்ளன. கலை, மருத்துவம், விஞ்ஞானம், ஆன்மிகம் என பல்வேறு துறைகளிலும் சாதனையாளர்கள் இவ்விருதுகள் மூலம் ஆண்டுதோறும் கௌரவிக்கப்படுகிறார்கள். பத்ம விருதுகள் பெறும் சாதனையாளர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக பத்மவிபூசன் விருது பெறும் தமிழ்த் திரையுலகின் ரஜினிகாந்த, புற்றுநோய் சிகிச்சை நிபுனர் டாக்டர் வி.சாந்தா, வாழும் கலை நிபுனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், மற்றும் பத்மஸ்ரீ விருது பெறும் சந்திரயான் திட்ட இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை, மருத்துவ நிபுணர் சந்திரசேகர் சேஷாத்திரி, சமூக சேவகர் அருணாச்சலம் முருகானந்தம், உள்ளிட்ட அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*மேலும் கடந்த ஆண்டு காஷ்மீர் தீவிரவாதிகளோடு போராடி உயிர்நீத்த மோகன்நாத் கோஸ்வாமிக்கு அசோக் சக்ரா விருது வழங்கி கௌவித்திருப்பதற்கும் என் நன்றியை குடியரசுத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.*

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

***ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,***
தலைவர்.